[28th August 1970

Poramboke lands

4-30 p.m. *36. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the District Revenue Officer, Tiruchy has recommended to the Government that the rule which prohibits the assignment of the poramboke lands in Pullambadi canal areas should be cancelled ; and

(*b*) if so, the action taken thereon ?

புறம்போக்கு நிலங்கள்

திரு. டி.கே. சுப்பையா : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளிலுள்ள புறம்போக்கு நிலங்களை அடமானம் செய்யக்கூடாது என்ற விதியை நீக்கக் கோரி திருச்சி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி (District Revenue Officer) அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அரசினர் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி.கே. சுப்பையா : தலைவர் அவர்களே, புள்ளம்பாடி வாய்க்கால் வெட்டிய காலத்திலேயே அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இப்போது அந்தப் பகுதியில் பல நிலங்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களாக இருப்பதால், விரைவில் இந்த உத்தரவை அமுல் செய்தால் பல ஏழைகளுக்கு நிலம் இலவசமாக அளிக்க வாய்ப்பிருப்பதால், அரசாங்கம் சீக்கிரமாக முடிவு எடுக்க முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : அதைத்தான் மூல பதிலிலேயே சொன்னேன். 1958-ல் அசைன்மெண்ட் செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டது. அப்படிச் சட்டம் போடப்பட்ட காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆயக்கட்டில் சிறிது நிலம் வேண்டுமென்று எடுத்துக்கொண்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று நிலம் கொடுக்க வேண்டுமே என்றுதான் அந்தத் தடை உத்தரவு போடப்பட்டது. சமீபத்தில் திருச்சி மாவட்டக் கலெக்டர் அவர்கள் வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாக இந்தத் தடை உத்தரவை நீக்கலாமென்று பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். அதே மாதிரி பொதுப் பணித் துறையில் சீஃப் இன்ஜினீயர் அவர்களும் அனுமதி அளித்தால், எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. தடை உத்தரவை நீக்கலாம் என்று சீஃப் இன்ஜினீயர் பரிந்துரை வழங்கியிருக்கிறார்கள். வருவாய்த் துறையும் பரிந்துரை அனுப்பியது. அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.